## வீதி பாதுகாப்பிற்கான தேசிய மன்றம் - 2011

### 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வீதி பாதுகாப்பிற்கான தேசிய மன்றத்தின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் நிலைமையையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

(அ) முதலீடு செய்யப்பட்ட திறைசேரி உண்டியல்கள் மீதான வட்டி மற்றும் நிலையான வைப்புக்கள் மீதான வட்டியினை அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்ய வேண்டிய போதிலும் காசு அடிப்படையில் கணக்கீடு செய்தலே மன்றத்தின் கொள்கையாக உள்ளது. அது தொடர்பில் தேவையான வெளிப்படுத்தல்கள் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிலையான சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்ட வருடத்திலிருந்து சொத்தின் ஆயுட்காலம் முழுவதற்கும் விகிதாசார ரீதியில் பெறுமானத்தேய்வு செய்தலே நிலையான சொத்துக்கள் தொடர்பில் பின்பற்ற வேண்டிய பெறுமானத்தேய்வுக் கொள்கையான போதிலும் மன்றத்தினால் மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட நிலையான சொத்துக்களிற்கு அந்தப் பெறுமானத்தேய்வுக் கொள்கையின் படி பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 1.2.2 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மன்றத்தினால் 2006 ஆம் ஆண்டிலிருந்து கணக்காய்வுக் கட்டணம் செலுத்தப்படாதிருந்ததுடன் 2006 இலிருந்து 2010 ஆம் ஆண்டு வரை செலுத்தவேண்டிய கணக்காய்வுக் கட்டணமான ரூபா 805,870 அட்டுறுச் செலவாக ஆண்டிற்கான கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் போக்குவரத்து அமைச்சினால் வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டு மன்றத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்த வாகனமொன்றிற்காக செய்யப்பட்டிருந்த ரூபா 47,782 செலவினத்தினை மீளாய்வாண்டிற்கான மன்றத்தின் செலவாக கணக்குகளிற்கு எடுக்காது 2012 ஆம் ஆண்டில் அமைச்சிற்கு அத்தொகையினை மீளளிப்புச் செய்து அந்த ஆண்டிற்கான செலவினமொன்றாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) இலங்கை காப்புறுதிச் சபையில் பதிவு செய்யப்பட்டுள்ள காப்புறுதிக் கம்பனிகளால் வழங்கப்படுகின்ற மூன்றாம் தரப்பு மோட்டார் வாகன காப்புறுதி உறுதிப்பத்திரங்களிலிருந்து கிடைக்கின்ற 1% பங்களிப்புத் தொகையிலிருந்து 02 கம்பனிகளிடமிருந்து பெறவேண்டியுள்ள ரூபா 98,212 தொகை காப்புறுதி வருமானக் கணக்குகளில் பெறவேண்டிய வருமானத்தின் கீழ் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) காசு அடிப்படையில் வருமானத்தினைக் கணக்கீடு செய்தலே மன்றத்தின் கொள்கையாக உள்ளது. இருப்பினும், 06 ஆம் இலக்க திறைசேரி உண்டியலினால் 2011 திசெம்பர் மாத வங்கிக் கூற்றிற்கு செலவு வைக்கப்பட்டிருந்த ரூபா 62,899 தொகையினை வருமானமாகக் கருதாது முன்கூட்டியே கிடைத்த வருமானமாகக் கருதியமையால் மேற்படி கணக்கீட்டுக் கொள்கைக்கு முரணாக மீளாய்வாண்டிற்கான வருமானம் அத்தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(உ) ஆண்டிற்கான நிலையான சொத்துக்களிற்குரிய மொத்த பெறுமானத்தேய்வு அளவு ரூபா 148,118 ஆன போதிலும் அது நிதிக்கூற்றுக்களில் ரூபா 126,597 எனக் காட்டப்பட்டிருந்தது. அதன் காரணமாக மீளாய்வாண்டிற்கான பெறுமானத்தேய்வு ரூபா 21,521 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

### 1.2.3 கணக்காய்விற்கான சான்றின்மை

(அ) பின்வரும் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில் அவற்றின் எதிரே காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்காமை காரணமாக அவற்றை திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

| | விடயம் | கணக்கின் படி பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (i) | நிலையான வைப்புக்கள் வட்டி | 847,068 | நிலையான வைப்புக்கள் பதிவேடு மற்றும் கணக்கீட்டுப் பதிவுகள் |
| (ii) | திறைசேரி உண்டியல்கள் வட்டி | 2,340,898 | திறைசேரி உண்டியல்கள் பதிவேடு |
| (iii) | காப்புறுதிக் கம்பனிகளிடமிருந்து கிடைக்கின்ற 1% வருமானம் | 20,873,477 | காப்புறுதிக் கம்பனிகளினால் வழங்கப்பட்ட மூன்றாம் தரப்பு காப்புறுதி பூட்கை வருமானங்கள் தொடர்பிலான முழுமையான விபரங்கள் அடங்கிய பதிவேடு |

(ஆ) தோலைந்துபோன கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள்

ரூபா 162,934 மொத்தப் பெறுமதி கொண்ட 4 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்படவில்லை.

### 1.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களிற்கான தொடர்பு | இணங்கி ஒழுகாமை |
|---|---|
| (அ) நிதிப்பிரமாணங்கள் | |
| (i) நி.பி. 135 | பதவியணியினரிற்கு முறைப்படி அதிகாரங்கள் பொறுப்பளிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நி.பி. 371 (2)(இ) | முற்பணங்களை வழங்குகையில் ஒரு சந்தர்ப்பத்தில் வழங்கப்படுகின்ற முற்பணம் ரூபா 20,000 இற்கு மேற்படாதிருக்க வேண்டிய போதிலும் 2 சந்தர்ப்பங்களில் ரூபா 100,000 மற்றும் ரூபா 50,000 வீதம் வழங்கப்பட்டிருந்தன. |
| (iii) நி.பி. 394 மற்றும் 396 | வழங்கப்பட்டிருந்த போதிலும் 06 மாதங்களைத் தாண்டியும் கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்படாத ரூபா 10,270 மொத்தப் பெறுமதிகொண்ட 04 காசோலைகளை மன்றத்திற்கு கிடைத்த வருமானமாகக் கொள்வதற்கோ அல்லது மீளச் செல்லுபடியாக்குவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iv) நி.பி. 756 மற்றும் 757 | மன்றத்தினால் மீளாய்வாண்டிற்காக பொருள் மெய்மையாய்வொன்றை மேற்கொண்டு அதன் மீதான அறிக்கையின் பிரதியொன்றை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| (ஆ) 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச் சட்டம் | உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் இம் மன்றம் வருமான வரியிலிருந்து விலக்களிப்புச் செய்யப்படாதிருந்த போதிலும் முன்னைய ஆண்டுகளைப் போன்றே மீளாய்வாண்டிலும் வரி செலுத்த வேண்டிய தேவைப்பாட்டினை இனங்கண்டு வரியினை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் படி மீளாய்வாண்டிற்கான மன்றத்தின் செயற்பாடுகளிலிருந்தான நிதி விளைவுகள் ரூபா 21,877,601 மிகையொன்றானதுடன் அதனையொத்த முன்னைய ஆண்டிற்கான நிதி விளைவு ரூபா 14,667,777 மிகையொன்றானமையால் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 7,209,812 முன்னேற்றத்தைக் காட்டப்பட்டது. மன்றத்தின் பிரதான வருமான மூலமான காப்புறுதிக் கம்னிகளிடமிருந்தான பங்களிப்புக்களின் அதிகரிப்பு மற்றும் வட்டி வருமானங்கள் இந்த நிதிவிளைவுகளின் வளர்ச்சிக்கு முக்கிய காரணிகளாக அமைந்திருந்தன.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

(அ) வீதி விபத்துக்கள் அற்ற சமூகமொன்றைத் தோற்றுவித்தலே இம்மன்றத்தின் பிரதான நோக்கமானதுடன் இந்த நோக்கத்தினை அடைந்து கொள்கையில் பின்வரும் பணிகள் தொடர்பில் ஒருங்கிணைப்பொன்று பேணிவரப்பட்டமைக்குச் சான்றுகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

- வீதிப் பாதுகாப்புகள் தொடர்பில் செயற்திட்டங்களைத் தயாரித்தலும் நடைமுறைப்படுத்தலும்

* அரசாங்க மற்றும் அரசு சார்பற்ற அமைப்புக்களில் வீதிப்பாதுகாப்பு மற்றும் தொடர்படைய பணிகளை ஒருங்கிணைத்தல்

* வீதிப் பாதுகாப்புச் செயற்பாடுகளிற்காக நிதி மற்றும் ஏனைய உதவிகளைப் பெற்றுக்கொள்ளல்.

* வீதிப் பாதுகாப்புடன் தொடர்புடைய கொள்கைகள் மற்றும் செயற்திட்டங்கள் தொடர்பில் அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குதல்,

* ஒத்த சர்வதேச நிறுவனங்களுடன் தொடர்புகளைப் பேணுதல் மற்றும் அனுபவங்கள் குறித்த அறிவினை பரிமாறிக்கொள்ளல்.

* தொடர்புடைய விடயங்கள் மீதான தகவல்களைச் சேகரித்தல், ஆய்வுகளை மேற்கொள்ளல் மற்றும் களப் பரிசோதனைகளை மேற்கொள்ளல்.

* வாகன விபத்துக்கள், வாகனங்களின் அளவு, அவற்றின் பண்புகளும் அமைப்பும், வீதிப் பாதுகாப்பு தொடர்பான உள்நாட்டு மற்றும் சர்வதேச புள்ளிவிபரத் தரவுகளை களஞ்சியப்படுத்தி பேணிச்செல்லல்.

மேற்படி பணிகளை நிறைவேற்றுகையில் தொடர்புடைய நிறுவனங்களான விதி அபிவிருத்தி அதிகாரசபை, குறித்த அமைச்சுக்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சு, போக்குவரத்து அமைச்சும் அதனோடிணைந்த சகல நிறுவனங்களும், பொலிஸ் திணைக்களம் போன்ற நிறுவனங்களுடன் வீதிப் பாதுகாப்பினை முறைப்படுத்துவதற்காக ஒருங்கிணைப்பொன்று பேணிவரப்பட்டமைக்குச் சான்றுகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) இழப்பீடு செலுத்தல்

---

இது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) இழப்பீடு செலுத்துதல் போதுமானதாக இல்லாமை

---

வீதி விபத்துக்களை ஏற்படுத்திவிட்டு தலைமறைவாகும் இனங்காணப்படாத வாகனங்களினால் விபத்துக்குள்ளாகி மரணித்த

அல்லது காயமடைந்த நபர்களுக்கு அல்லது அவர்களில் தங்கியிருப்போர்க்கு நிதி நிவாரணமளித்தலே 2004 திசெம்பர் மாதத்தில் தாபிக்கப்பட்ட இம்மன்றத்தின் பிரதான நோக்கமாகும். இது தொடர்பாக மேற்கொண்ட பரிசோதனையில் மன்றம் ஆரம்பிக்கப்பட்ட வருடத்தி லிருந்து 2011 ஆண்டின் இறுதி வரை கிடைக்கப்பெற்றிருந்த 143 விண்ணப்பங்களில் 43 விண்ணப்பங்களிற்காக ரூபா 1,835,000 தொகை இழப்பீடாக செலுத்தப்பட்டிருந்தமை வெளிப்பட்டது. 47 விண்ணப்பங் களிற்கான சான்றிதழ்களின் உறுதிப்படுத்தல்கள் கிடைப்பதில் காணப்பட்ட தாமதமே அவற்றிற்கான இழப்பீடுகளை செலுத்துவதற்கான தாமதத்திற்கு காரணமாகியிருந்தது. ஆரம்பிக்கப்பட்ட ஆண்டிலிருந்து இது வரை நிதியத்தில் காணப்பட்ட திரட்டிய தொகை ரூபா 121,272,202 ஆன போதிலும் அக் காலப்பகுதியில் செலுத்தப்பட்டிருந்த இழப்பீட்டுத் தொகையின் அளவு நிதியத்தின் மொத்தத் தொகையுடன் ஒப்பிடுகையில் 1.6% அளவாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. இழப்பீட்டுத் தொகையினை திருத்தியமைத்தல் தொடர்பில் மன்றத்தின் கவனம் திரும்பியுள்ளதாக தலைவரினால் அறிவிக்கப்பட்டிருந்தது.

(ii) விணப்பங்கள் கிடைத்தல் மற்றும் இழப்பீடு செலுத்துதல்

---

இம் மன்றத்தின் பணிகள் தொடர்பில் பொது மக்களை அறிவுறுத்துவதற்காக தற்போது செய்தித்தாள் அறிவித்தல்கள், ‘‘நாட்டிற்கு மகுடம்’’ கண்காட்சியின் போது விழிப்புணர்ச்சியூட்டல் போன்ற முறைகளை பயன்படுத்தியிருந்த போதிலும் அவைகள் பொதுமக்களை அறிவுறுத்துவதற்கு போதுமானதாக இல்லாதிருந்தமையை காணக்கூடியதாக உள்ளது. கடந்த 07 ஆண்டுகளிற்கான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| ஆண்டு | கிடைத்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை | இழப்பீடு செலுத்தப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 2005 | விண்ணப்பங்கள் கிடைத்திருக்கவில்லை. | இழப்பீடு செலுத்தியிருக்கவில்லை |
| 2006 | - மேற்படி - | - மேற்படி - |
| 2007 | 11 | - மேற்படி - |
| 2008 | 11 | 13 |
| 2009 | 11 | 13 |
| 2010 | 49 | 10 |
| 2011 | 61 | 07 |
| | 143 | 43 |

(ஆ) வருமான மூலத்தினை கணிப்பீடு செய்வதற்கு முறையான பொறிமுறை இல்லாமை

---

மன்றத்தின் பிரதான வருமான மூலமான காப்புறுதி நிறுவனங்களிடமிருந்து கிடைக்கும் பங்களிப்புகள் சரியானதா என்பதனைக் கணிப்பீடு செய்வதற்காக முறைப்படியான பொறிமுறைகள் எதுவும் பயன்படுத்தப்படாதிருந்ததுடன் தாமதமாக கிடைக்கின்ற பங்களிப்புகள் தொடர்பில் எவ்வித விசாரணைகளும் மேற்கொள்ளப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. சகல காப்புறுதி நிறுவனங்களினாலும் வழங்கப்படுகின்ற பங்களிப்புத் தொகைகளை மன்றம் கையேற்பது மாத்திரம் இடம்பெற்று வருவதுடன் அக்கம்பனிகளினால் விநியோகிக்கப்படுகின்ற மூன்றாம் தரப்புக் காப்புறுதிப் பூட்கைகளின் எண்ணிக்கை தொடர்பில் விசாரணை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை**

(அ) 2004 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இம் மன்றத்திற்கு அங்கீகரித்த பதவியணியொன்று இல்லாதிருந்ததுடன் கடந்த 07 ஆண்டுகளில் இம் மன்றத்திற்கு போக்குவரத்து அமைச்சின் உத்தியோகத்தர்கள் அவ்வப்போது இணைப்புச் செய்யப்பட்டு செயற்பாடுகள் நிறைவேற்றிக் கொள்ளப்பட்டிருந்தன.

(ஆ) இலங்கை காப்புறுதிச் சபையில் பதிவு செய்யப்பட்டுள்ள காப்புறுதிக் கம்பனிகளால் வழங்கப்படுகின்ற மூன்றாம் தரப்பு மோட்டார் வாகன காப்புறுதி உறுதிப்பத்திரங்களிலிருந்து 1% பங்களிப்புத் தொகை மன்றத்திற்கு அனுப்பிவைக்கப்பட வேண்டிய போதிலும் 02 காப்புறுதிக் கம்பனிகளினால் 1% இற்குக் குறைவான பங்களிப்புத் தொகை செலுத்தப்பட்டமையால் இழப்பாகியிருந்த வருமானம் ரூபா 5,623,485 ஆகும்.

**3.3 நிதிகளின் குறைப் பாவனை**

மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 43,634,852 ஆன வங்கி மீதியொன்று மாதாந்தம் தொடர்ச்சியாக காணப்பட்டதுடன் மன்றச் செயற்பாடுகளிற்காக போதிய தொகையினை வைத்துக் கொண்டு எஞ்சிய மிகை நிதியினை திறைசேரியின் அங்கீகாரத்துடன் திறைசேரியின் தற்காலிக நிதியத்தில் முதலீடு செய்வதற்கோ அல்லது ஏனைய பயனுள்ள முதலீடு ஒன்றிற்காகவோ பயன்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4. கணக்களிப்பு மற்றும் நல்ல ஆளுகை**

**4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

2003 ஜுன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க அரசாங்க முயற்சிகள் திணைக்களச் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் நிதியாண்டு முடிவுற்று 60 நாட்களுக்குள் வருடாந்த நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2011 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2012 யூன் 12 ஆந்

திகதியன்றே கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. அதாவது 103 நாட்கள் தாமதத்தின் பின்னராகும், போதிய பதவியணியினர் இல்லாமையே இதற்குக் காரணமாகும்.

## 4.2 கூட்டுத் திட்டம் மற்றும் செயற்பாட்டுத் திட்டம்

2003 ஜுன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க அரசாங்க முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.2 ஆம் பந்தியின் பிரகாரம் நிறுவனத்தின் நோக்கங்களையும் இலட்சியத்தினையும் அடைந்து கொள்வதற்காக கூட்டுத்திட்டமொன்றும் செயற்பாட்டுத் திட்டமொன்றும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.3 உள்ளகக் கணக்காய்வு

மன்றம் தாபித்ததிலிருந்து மீளாய்வாண்டு வரைக்கும் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்றை தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் தொடர்புடைய அமைச்சினாலும் மீளாய்வாண்டில் உள்ளகக் கணக்காய்வொன்றை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்காக வருடாந்த பாதீடொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் செலவினத்தினைப் பரீட்சிக்கையில் சில விடயங்களிற்கான அங்கீகரித்த ஏற்பாட்டினை மீறி செலவினம் செய்யப்பட்டிருந்ததுடன் இன்னும் சில விடயங்களிற்கான ஏற்பாட்டுத் தொகைகளில் போதியளவான நிதிகள் செலவிடப்பட்டிருக்கவில்லை. இதன் படி பாதீடானது பயனுள்ள முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்திக் கொள்ளப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பில் பல்வேறு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டதுடன் அவைகள் தொடர்பில் அவ்வப்போது மன்றத்திற்கு சுட்டிக்காட்டப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) கணக்கீடு

(ஆ) முதலீடுகள் மற்றும் வட்டிக் கணிப்பீடு

(இ) காப்புறுதிக் கம்பனிகளிலிருந்து கிடைக்கும் பங்களிப்புகளை இணங்காணல் மற்றும் அனுப்புதல் தாமதங்களை தவரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்